# PRE BOARD EXAM JANUARY 2018

## SECOND LANGUAGE TAMIL

CLASS : X M.MARKS :80

DATE : TIME: 3Hrs.

---

**The question paper is divided into four sections:**

இக்கேள்வித் தாள் நான்குபிரிவுகளைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| SECTION : A | Reading comprehension | - 15 Marks |
| பிரிவு : அ | படித்தல் | -15 மதிப்பெண்கள் |
| SECTION : B | Writing | - 14 Marks |
| பிரிவு : ஆ | எழுதுதல் | -14 மதிப்பெண்கள் |
| SECTION : C | Grammar | - 15 Marks |
| பிரிவு : இ | இலக்கணம் | -15 மதிப்பெண்கள் |
| SECTION : D | Literature / Text Books | - 36 Marks |
| பிரிவு : ஈ | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | -36 மதிப்பெண்கள் |

---

- எல்லாவினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கப்படவேண்டும்.
- ஒவ்வொருவினாவிற்கும் உரியமதிப்பெண்கள் அதனதன் இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பிரிவு- அ(படித்தல் 15 மதிப்பெண்கள்)

1.கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. 5×1=5

யானையின் தந்தங்கள் வலுவானவை. இதன் கோரைப்பற்கள் நன்கு வளர்ந்து தந்தங்களாக மாறியுள்ளன. யானை தன் தந்தங்களை தற்காப்புக்காக்கவும்

சண்டையிடவும் எதிரிகளை அச்சுறுத்தவும் நிலத்தின் அடியில் வளரும் கிழங்குகளைத் தோண்டவும் கனமான பொருட்களைத் தூக்கவும் பயன்படுத்துகிறது. பெரிய தேக்கு கருங்காலி மரத்துண்டுகளை துதிக்கையின் மூலம் தந்தங்களின் மேல் வைத்துக் கொண்டு அவற்றை தூக்கிச் செல்லும்.

யானையின் ஆயுள் முழுவதும் தந்தங்கள் வளரும். தந்தம் சராசரியாக 11 அடி நீளமுள்ளது. வயதான யானைகளுக்கு தேவையற்ற பாரமாகக் கருதப்பட்டு வெட்டப்படும். பொதுவாக ஆப்பிரிக்க யானைகளின் தந்தம் இந்திய யானைகளின் தந்தங்களை விட நீண்டிருக்கும்.

வினாக்கள்:

1.யானையின் தந்தங்கள் சராசரியாக எத்தனை அடி நீளம் வளரும்?

அ.10 அடி நீளம் ஆ.15 அடி நீளம் இ.11 அடி நீளம்

2. தேக்கு கருங்காலி என்பவை ——————

அ. யானையின் கோரைப்பற்கள் ஆ. கிழங்குவகை இ. மரவகைகள்

3.தந்தங்கள் என்பன யானையின் ————————

அ. கோரைப்பற்கள் ஆ. எலும்புகள் இ.துதிக்கைகள்

4. யானையின் தந்தங்கள் எப்படிப்பட்டவை?

அ.வலுவற்றது ஆ.வலுவானவை இ.அழகானவை

5. ஆப்பிரிக்க யானைகளின் தந்தம்

அ. குறுகியது ஆ. நீளமானது இ. உயரமானது

2.கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. $5 \times 1 = 5$

ஒரு சமயம் அதியமான் மலை வளம் காணச் சென்றிருந்தான். அப்போது அங்கிருந்த நெல்லி மரத்தில் ஓர் அபூர்வ நெல்லிக் கனியைக் கண்டான். அதை உண்டால் நெடுங்காலம் நோய்நொடியின்றி நலமாக வாழமுடியும் என்று அறிந்தான். உடனே அதை எப்படியும் பறித்து உண்டுவிட முடிவுசெய்தான். மிகவும் சிரமப்பட்டு மலையின் உச்சிக்குச் சென்று அந்நெல்லிக்கனியைப் பறித்தான். அதை உடனே உண்டுவிடத் தீர்மானித்து வாயருகே கொண்டு சென்றான். அப்போது அதியமானுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. நாம் அக்கனியை உண்டு நீண்டகாலம் வாழ்ந்தால் நமது நாட்டுக்கு மட்டுமே நன்மை செய்ய முடியும். ஆனால் புலவர் ஔவையார் உண்டு நீண்டகாலம் வாழ்ந்தால் அவரால் பல கவிதைகள்

கிடைக்கும். தமிழின் புகழ் சிறக்கும் என்று எண்ணி ஔவையாரிடம் கொண்டுவந்து கொடுத்தான். அக்கனியின் சிறப்பைக் கூறினால் உண்ண மறுத்துவிடுவாரோ என எண்ணி உண்டபிறகே அக்கனியின் சிறப்பு பற்றிக் கூறினார். இதைக் கேட்ட புலவரின் மனம் நெகிழ்ந்தது. மன்னர் அதியமான் தமிழ்பால் கொண்ட பற்றும் தன் மீது கொண்ட அன்பும் எத்தகையது என்று அறிந்து அவர் அன்பும் பெருமையும் உயர் கொடை குறித்தும் பல பாடல்களைப் பாடினார்.

வினாக்கள்:

1.நெல்லிக்கனியின் சிறப்பு யாது ?
அ. நெடுங்காலம் நோய்நொடியின்றி நலமாக வாழமுடியும்
ஆ.சிறுகாலம் நோய்நொடியின்றி நலமாக வாழமுடியும்
இ. பலகாலம் நோய்நொடியோடு நலமாக வாழமுடியும்

2.அதியமான் நெல்லிக்கனியை உண்ணாததற்குக் காரணம் என்ன ?
அ.தனது நாட்டுக்கு மட்டுமே நன்மை ஆ. எதிரி நாட்டுக்கு நன்மை
இ.நண்பன் நாட்டுக்கு நன்மை

3. மலை வளம் காணச் சென்றது யார்?
அ. ஔவை ஆ.அதியமான் இ. புலவர்

4.நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுக்க அதியமான் விரும்பியதன் காரணம் என்ன ?
அ. பல கவிதைகள் கிடைக்கும் ஆ.சில கவிதைகள் கிடைக்கும்
இ. ஒரு கவிதை கிடைக்கும்

5.ஔவையின் மன நெகிழ்ச்சிக்குக் காரணம் என்ன?
அ. அதியமான் தம்பால் கொண்ட பற்றும் தன் மீது கொண்ட அன்பும்
ஆ. அதியமான் தமிழ்பால் கொண்ட பற்றும் தன் மீது கொண்ட அன்பும்
இ.அதியமான் மக்கள் மீது கொண்ட பற்றும் தன் மீது கொண்ட அன்பும்

3. சுருக்கி எழுதுதல் (5)

நம் பாரதம் பல்வேறு மதம் மொழி இனம் கலாச்சாரம் தட்பவெப்பநிலை முதலியவற்றில் பல்வேறு வேறுபாடு கொண்டு விளங்குகிறது. மொழி இனம் நிறம் பண்பாட்டால் வேறுபட்டிருந்தாலும் இந்தியர் என்ற ஓர் உணர்வால் ஒன்றுபட்டவர்கள் நம் பாரத மக்கள். முற்காலத்தில் நம் இந்திய துணைக்கண்டத்தில் பல பேரரசர்களும் சிற்றரசர்களும் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் பல வேற்றுமைகள் காணப்பட்டாலும் தாம் அனைவரும் இந்தியர் என்ற உணர்வால் ஒற்றுமையுடன் வாழ விரும்பினர்.

அந்நியர் வருகையால் நம் நாடு சீர் கெட்டது. எங்கும் பிரிவினையும் சண்டை சச்சரவுகளையும் தூண்டிவிட்ட ஆங்கிலேயர் நம் நாட்டை அடிமைப்படுத்தி 300 ஆண்டுகாலம் ஆட்சி செய்தனர். ஆனால் இந்தியர்களின் ஒற்றுமை என்ற ஓரே உணர்வே இந்தியா விடுதலை அடைய முக்கிய காரணமாக விளங்கியது. சகோதர

மனப்பான்மையை போற்றுவோம். மனித நேயத்தை வளர்ப்போம். நாட்டை உயர்த்துவோம்.

## பிரிவு- ஆ(எழுதுதல் 14 மதிப்பெண்கள்)

I. கடிதம் எழுதுதல் (6)

1.நீ புதிதாக சேர்ந்திருக்கும் விடுதி வாழ்க்கையைப் பற்றி உன் நண்பனுக்கு அல்லது தோழிக்கு ஒரு கடிதம் எழுதுக.

(அல்லது)

உங்கள் பகுதியில் தானயிங்கி பணம் வழங்கி (ஏடிஎம்) அமைத்துத் தருமாறு இந்தியன் வங்கி பொது மேலாளருக்கு ஒரு கடிதம் எழுதுக.

(உனது முகவரி ப.மாதவன் (அ) ப.மாதவி எண்.8 சரஸ்வதி நகர் வில்லிவாக்கம் சென்னை-49 எனக் கொள்க)

II. கட்டுரை எழுதுக. (8)

அ. முன்னுரை – புத்தகக் கண்காட்சி அமைவிடம் - அமைப்பு முறை – பல்துறை நூல்கள் - கண்காட்சியின் பயன் - நோக்கம் - முடிவுரை.

(அல்லது)

ஆ. முன்னுரை– தொழிற்கல்வி - விளக்கம் - வகைகள் –தற்காலக் கல்விமுறை– தொழிற்கல்வியால் ஏற்படும் நன்மைகள் –முடிவுரை.

(அல்லது)

இ.முன்னுரை – நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - வருமுன் காப்போம் - உழைப்பு – உணவே மருந்து – உடற்பயிற்சி – முடிவுரை.

## பிரிவு- இ(எழுதுதல் 15 மதிப்பெண்கள்)

I. சான்று தருக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)

1.மகரக் குறுக்கம்

அ.பொன்ம் ஆ.போணம் இ.போன்ம்

2.இனங்குறித்தல்

அ.சோறு உண்டான் ஆ.சொறு உண்டான் இ.சோறு உண்டாண்

3.குறிஞ்சி நில உணவு

அ.செந்நெல் வெண்ணெல் ஆ.வரகு சாமை இ.மலைநெல் தினை

4.நிரை நேர் நேர்

அ.பலவாறு ஆ.பாலாறு இ.ஊர்மக்கள் ஈ.பெரியணை

5.வஞ்சப்புகழ்ச்சியணி

அ.துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉம் மழை.

ஆ.சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க

சொல்லிற் பயனிலாச் சொல்

இ.தேவர் அனையர் கயவர் அவருந்தாம்

மேவன செய்தொழுக லான்

II. நிரப்புக. (எவையேனும் மூன்று மட்டும்) (3)

1.பொருளிலக்கணம் ——————— வகைப்படும்.

அ.நான்கு ஆ.மூன்று இ.இரண்டு

2.கண்டானை – என்ற சொல் ——————— சீர்களைக் கொண்டுள்ளது.

அ.இரண்டு ஆ.நான்கு இ.மூன்று

3.முற்றுப்பெறாத வினைச் சொற்கள் வேறொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது - ———————

அ.முற்றெச்சம் ஆ.வினையெச்சம் இ.பெயரெச்சம்

4.ஒரு பொருளைத் தரும் பல சொற்கள் தொடர்வது ——————ஆகும்.

அ.ஒன்றொழிப்பொதுச்சொல் ஆ.இனங்குறித்தல் இ.ஒருபொருட்பன்மொழி

5.நேர் என்பதன் ஈற்றுச்சீர் ——————— ஆகும்.

அ.நாள் ஆ.காசு இ.மலர்

III. கூறியவாறு செய்க.(எவையேனும் மூன்று மட்டும்) (3)

1.இனமொழிவிடையாக மாற்றுக. ஆடுவாயா?

அ.பாடுவேன் ஆ.சாப்பிடுவேன் இ.படிப்பேன்

2.அடுக்குத்தொடர் - ஓடு

அ.பளபள ஆ.குடுகுடு இ.மடமட

3.பைங்கூழ் (நிலைமொழியை எழுதுக)

அ.பைசு ஆ.பசும் இ.பசுமை

4.நன்று (அசையைக் குறிப்பிடுக)

அ.நிரை நேர் ஆ.நேர் நேர் இ.நிரை நிரை

5.விளரியாழ் (எவ்வகை நிலத்திற்குரியது)

அ.குறிஞ்சி ஆ.முல்லை இ.நெய்தல்

IV. இலக்கணக்குறிப்பு தருக (எவையேனும் மூன்று மட்டும்) (3)

1.பார்மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர்கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார்முழுதுஞ் சாற்றிடுவாய் பாய்ந்து

அ.நேரிசை வெண்பா ஆ.நேரிசை ஆசிரியப்பா இ.இன்னிசை சிந்தியல் வெண்பா

2.கருங்குயில்

அ.இயல்புப்புணர்ச்சி ஆ.பண்புப்பெயர்ப் புணர்ச்சி இ.மகரஈற்றுப் புணர்ச்சி

3.மாற்றரசன் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைத்தல்

அ.நொச்சித் திணை ஆ.உழிஞைத் திணை இ.பொதுவியல் திணை

4.பள்ளி சீருடை இல்லையோ?

அ.கொடை வினா ஆ.கொளல் வினா இ.ஏவல் வினா

5.படித்த மலர்

அ.வினையெச்சம் ஆ.முற்றெச்சம் இ.பெயரெச்சம்

V. சரியான தொடரைத் தேர்வு செய்க.(எவையேனும் மூன்று மட்டும்) (3)

1. அ. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி

ஆ. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது வஞ்சப்புகழ்ச்சி அணி

இ. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் குறிப்பினை ஏற்றிக் கூறுவது சிலேடையணி

2.அ. பா மூன்று வகைப்படும்.

ஆ. பா இரண்டு வகைப்படும்.

இ. பா நான்கு வகைப்படும்.

3.அ. அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது புறத்திணை எனப்படும்.

ஆ. அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது அகத்திணை எனப்படும்.

இ. அன்புடைய தலைவன் தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது சிறுபொழுது எனப்படும்.

4. அ. பெயரெச்சத்தில் எச்சங்கள் மட்டுமே காலத்திற்கேற்ப மாறுபடும்.

ஆ. பெயரெச்சத்தில் பெயர்கள் மட்டுமே காலத்திற்கேற்ப மாறுபடும்.

இ. பெயரெச்சத்தில் காலங்கள் மட்டுமே காலத்திற்கேற்ப மாறுபடும்.

5. அ. உவம உருபு என்பது உவமானம் மற்றும் உவமேயத்திற்கு இடையில் வருவது.

ஆ. உவம உருபு என்பது உவமை மற்றும் உவமேயத்திற்கு இடையில் வருவது.

இ. உவம உருபு என்பது உவமானம் மற்றும் உவமைக்கு இடையில் வருவது.

## பிரிவு– ஈ (இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் -36 மதிப்பெண்கள்)

1.கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. 5×1=5

வள்ளலார் இறைவன் ஒருவன். அவன் ஒளி வடிவினன். அருட்பெருஞ் சோதியாக விளங்கும் இறைவனை அடைவதற்குத் தனிபெருங்கருணையே கருவி என்பதனை விளக்கினார். புலால் புசித்தல் கூடாது. ஏழை மக்களின் பசியைப் போக்கல் வேண்டும். அனைவரையும் உடன்பிறப்பாய் நேசித்தல் வேண்டும் என்ற வள்ளலார் மொழிப்பற்று மிக்கவர். தமிழ்மொழியே இறவாத நிலைதரும். சாகாக்கல்வியை மிகவும் எளிமையாய் அறிவிப்பது தென்மொழியே என்றார் வள்ளலார்.

வினாக்கள்:

1.இறைவன் எவ்வடிவினன்?

அ.நீர் ஆ.நிலம் இ.காற்று ஈ.ஒளி

2.இறைவனை அடைய ஏற்றவழி யாது?

அ.கருணை வழி ஆ.மறைவழி இ.துறவறவழி ஈ.தவநெறி

3.மனிதன் எதைப் புசித்தல் கூடாது?

அ.பழங்கள் ஆ.கீரைகள் இ.புலால் ஈ.காய்கனிகள்

4.எவர் பசியுடையவராவர்?

அ.யோகிகள் ஆ.செல்வர் இ.நோயானவர்கள் ஈ.ஏழைமக்கள்

5.இறவாத நிலை தருவது எது?

அ.மறைமொழி ஆ.அருள்மொழி இ.தமிழ்மொழி ஈ.அன்னியமொழி

2.கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. 4x1=4

ஆற்றல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல்

அன்பெனப் படுவது தனகிளை செறாஅமை

வினாக்கள்:

1.கிளை என்பதன் பொருள்?

அ.மரக்கிளை ஆ.கீழே இ.சுற்றம் ஈ.மரம்

2.ஒழுகுதல்

அ.பண்புப்பெயர் ஆ.தொழிற்பெயர் இ.வினைத்தொகை ஈ.பண்புத்தொகை

3.இச்செய்யுள் இடம்பெற்ற நூலின் பெயர்

அ.புறநானூறு ஆ.தேவாரம் இ.சீறாப்புராணம் ஈ.கலித்தொகை

4.நெய்தல் கலியைப் பாடியவர் ————

அ.நல்லந்துவனார் ஆ.பாரதியார் இ.உ மறுபுலவர் ஈ.கபிலர்

3.கோடிட்ட இடத்தை நிரப்புக. 4×0.5=2

அ..காலம் கருதி இருப்பர் கலங்காது

———— கருது பவர் (நிலம் /ஞாலம்)

ஆ. பொறாமை உள்ளவனிடம் ———————— நிலைக்காது. (கல்வி / செல்வம்)

இ. உறுபொருள் என்று வள்ளுவர் குறிப்பிடுவது —————(சுங்கப் பொருள்/மக்கள் வரியாகத் தரும் பொருள்)

ஈ. அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை

திறனறிந்து தேர்ந்து கொளல். அடி எதுகையை எழுதுக.(ற/றி)

4. விடையளி (ஏதேனும் இரண்டு மட்டும்) (8)

அ. காலமறிதலை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

ஆ. கண்ணகிக்கு பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாது?

இ. சாதனைப் பூக்கள் என்று எவற்றைச் சாலை.இளந்திரையன் சுட்டுகிறார்?

ஈ.நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

5. விடையளி (ஏதேனும் இரண்டு மட்டும்) (10)

அ. குறிப்பு எழுதுக. 1. கனிமவியல் அறிவு. 2.மண்ணியல் அறிவு

ஆ. இராணுவம் காவல் முதலான பணிகளில் சேர்வதற்கான கூறுகள் யாவை?

இ. அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக.

ஈ. திரைப்படக்கலை உருவான வரலாறு குறித்துக் கட்டுரை எழுதுக.

6. விடையளி (ஏதேனும் ஒன்று மட்டும்) (7)

அ. அடித்தளம் - நேர்முக சிந்தனையே வாழ்வின் அடித்தளம்

ஆ. மெல்ல மெல்ல மற என்னும் சிறுகதையின் மையக்கருத்தை சுருக்கி எழுதுக.

இ.நூலகமும் அவற்றின் செயல்பாடுகளும்